செ.வெ.எண்: 574 நாள்: 09/07/2010

# செய்தி வெளியீடு– 9.7.2010

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தமிழில் படித்தவருக்கு முன்னுரிமை அடிப்படையில் சென்னை உயர் நீதிமன்ற அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அலுவலகத்தில் முதன்முதலாகப் பணி நியமன ஆணை !

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்!

அண்மையில் கோவையில் வெற்றிகரமாக நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவுரையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழில் படித்தவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை–சாந்தோம், மாவட்ட தொழில்நுட்ப வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகப் பரிந்துரைக்கப்பட்டவர்களில், தொடக்கக் கல்வி முதல் தமிழிலேயே படித்த திரு. பொ. பேதுரு என்பவருக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அலுவலகத்தில் நகல் பெருக்கியாளர் (ஜெராக்ஸ் ஆபரேட்டர்) பணியிடத்தில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி நியமன ஆணையை திரு. பொ. பேதுரு அவர்களிடம் இன்று (9–7–2010) முதலமைச்சர் கலைஞர் வழங்கி வாழ்த்துக் கூறினார். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தமிழிலேயே படித்து முதன்முதலாக அரசுப் பணியில் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, சென்னை உயர் நீதிமன்ற அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் திரு. பெ. குமரேசன் உடனிருந்தார்.

1/1

* * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9